செ.வெ.எண் : 10 / ஜூன் நாள் : 06.06.2017

# இராமநாதபுரம் மாவட்டம்

## இராமநாதபுரம் அரசு இசைப்பள்ளியில் 2017-2018-ஆம் ஆண்டிற்கான மாணவர் சேர்க்கை நடைபெறவுள்ளது.

## மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தகவல்

இராமநாதபுரம் மாவட்டம், இராமநாதபுரம் அரசு இசைப்பள்ளியில் 2017-2018-ஆம் ஆண்டிற்கான மாணவர் சேர்க்கை நடைபெறவுள்ளது. இசைத்துறையில் ஈடுபாடுள்ள மாணவர்கள் மற்றும் இளைஞர்கள் இந்த வாய்ப்பினை பயன்படுத்திக் கொள்ளலாம் என மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளதாவது:

இராமநாதபுரம் மாவட்டம், இராமநாதபுரம் அரண்மனை பகுதியில் கலைபண்பாட்டுத் துறையின் கீழ் மாவட்ட அரசு இசைப்பள்ளி செயல்பட்டு வருகின்றது. இந்த இசைப்பள்ளியில் 2017-2018-ஆம் ஆண்டிற்கான மாணவர் சேர்க்கை நடைபெறுகின்றது. குரலிசை, நாதஸ்வரம், தவில், தேவாரம், பரதநாட்டியம், வயலின், மிருதங்கம் ஆகியவற்றில் பயிற்சிகள் வழங்கப்பட்டு பயிற்சியின் முடிவில் சான்றிதழ்களும் வழங்கப்படும். அரசு இசைப்பள்ளியில் சேர்வதற்கு வயது 12 முதல் 30 வரை இருத்தல் வேண்டும். மேலும் 8 ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

அரசு இசைப்பள்ளியில் பயிற்சி காலம் 3 ஆண்டுகளாகவும், பயிற்சி கட்டணம் ஆண்டொன்றுக்கு ரூ.152/-ஆகவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. மேலும் பயிற்சி பெறும் நபர்களுக்கு கல்வி உதவித்தொகையாக மாதந்தோறும் ரூ.400/- வழங்கப்படும். அரசு இசைப்பள்ளியில் சேர்வதற்கு விண்ணப்பிப்பதற்கான கடைசி நாளாக ஜூலை 31 என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. எனவே இசைத்துறையில் ஆர்வமுள்ள இளைஞர்கள் இந்த வாய்ப்பினை முழுமையாக பயன்படுத்திக் கொள்ள வேண்டும். இது குறித்த கூடுதல் விவரங்களை மாவட்ட அரசு இசைப்பள்ளி, 14, கௌரி விலாஸ், அரண்மனை, இராமநாதபுரம் என்ற முகவரியில் நேரிலோ, 04567-220104 என்ற தொலைபேசி எண்ணின் வாயிலாகவோ தெரிந்து கொள்ளலாம் என மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்**